# සෞඛ්‍ය හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
## சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு
## Ministry of Health & Mass Media

# "அசிதிசி — தொழில்நுட்ப" — வெகுசன ஊடக புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம் — 2026

## ஊடகவியலாளர்களின் தொழில்நுட்ப பிரவேசத்திற்கான வசதிகளை மேம்படுத்துதல்

**நோக்கம்**

- இலங்கை ஊடகவியலாளர்களின் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துதல்

**இலக்காகும் குழு**

- 02 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் 2413/44ஆம் இலக்க 2024.12.05ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்படுத்தலுக்கு உரித்தான ஊடகவியலாளராக இருக்க வேண்டும். **(https://www.news.lk/images/pdf/sinhala%20gazette.pdf)**

**தெரிவுசெய்யப்படும் அளவுமுறை**

- நேர்முகத் தேர்வுக்கான விண்ணப்பம் கோரப்படும் திகதியில் கீழ்வரும் கற்கை நெறிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள அல்லது தற்போது அந்தக் கற்கை நெறிகளைக் கற்கும் ஒருவராக இருக்க வேண்டும். (நேர்முகத் தேர்வின்போது கற்கை நெறிக்காக தெரிவு செய்யப்பட்டமை பற்றி அல்லது அதைக் கற்பதாக அல்லது தொடர்புடைய நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.)
- விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளில் 18 - 55 வயதிற்கு இடைப்பட்டவராகவிருக்க வேண்டும்.
- அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் ஊடகவியலாளர்களுக்கான 2025/2026 வருடத்திற்கு வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டையை வைத்திருக்கும் வேண்டும்.
- "அசிதிசி" வெகுசன ஊடக புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் பிரதிபலனைப் பெற்று அந்த கற்கை நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் மீண்டும் விண்ணப்பிக்கலாம்.

**நிதி வசதிகள் வழங்குதல்**

- இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணைவாக செயற்படுத்தப்படும் ''அசிதிசி ஊடகவியல் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம் - 2026'' என்பதற்கு விண்ணப்பிக்கும் ஊடகவியலாளர்கள் மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் விண்ணப்பிக்கலாம் என்பதுடன் இரண்டு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் அதிகூடிய தொகையாக 350,000.00 ரூபா என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**கற்றை நெறி மற்றும் அவற்றை வழங்கும் நிறுவனங்கள்**

i. **ஊடக தொடர்பாடல் கல்வில் பிரிவு, களனி பல்கலைக்கழகம்**
   - Advanced Certificate in Digital Arts and Multimedia Studies

ii. **லேக்ஹவுஸ் அகடமி - அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்**
   - டிஜிட்டல் ஊடகவியல் டிப்ளோமா கற்கை நெறி
   - புகைப்படவியல் தொடர்பான உயர் சான்றிதழ் கற்கை நெறி

iii. **இலங்கை அச்சக நிறுவனம்**
   - Advance Certificate in 3D Modeling & Animation
   - Advanced Certificate in Non- Linnear Editing for screen
   - Advanced Certificate in Web Design
   - Diploma in Graphic Design

iv. **MMC Campus – வ/ப சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு**
   - Lighting Effects and Principles for Indoor & Outdoor Events
   - Sound engineering principles for Indoor & Outdoor Events
   - Digital Media Content Creation for all Platforms

v. **ஊடக அகடமி - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
   - செவிப்புல ஊடக நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான சான்றிதழ் கற்கை நெறி

vi. **ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவு - இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்**
   - ஊடகவியலாளர்களுக்கான Broadcast Journalism பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
   - இதற்கு மேலதிகமாக ஊடகத்தோடு தொடர்புடைய வேறு பாடங்களுக்கு விண்ணப்பித்தால் செயலாளரின் ஒப்புதலின் கீழ் கவனத்திற் கொள்ளப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

- சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் தெரிவுக் குழுவினால் நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தப்பட்டு புலமைப்பரிசில் பயன்பெறுநர் தெரிவு செய்யப்படுவர். இறுதித் தீர்மானத்தை அமைச்சின் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**விண்ணப்பப் படிவம் அனுப்ப வேண்டிய முறை**

- பின்வரும் QR குறியீட்டை ஸ்கேன் செய்து நிகழ்நிலை முறையின் ஊடாக www.media.gov.lk இணையதளத்திற்கு நேரடியாக பிரவேசித்து அங்குள்ள விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து அல்லது பணிப்பாளர் (அபிவிருத்தி), சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, இல. 163, ''அசிதிசி மெதுர'', கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு - 05 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அசிதிசி வெகுசன ஊடக புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம்'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.
- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளல் 2026 ஜூன் மாதம் 10ஆம் திகதி அன்று நிறைவுறும்.

**கவனிக்க வேண்டியது**

- புலமைப்பரிசில் கையளிக்கப்பட்ட பின்னர் அமைச்சுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ள வேண்டும் என்பதுடன் குறித்த கற்கை நெறியை 06 மாத காலத்திற்குள் ஆரம்பிக்க வேண்டும். இல்லையெனில் புலமைப்பரிசிலை இரத்துச் செய்யவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தொடர்புகளுக்கு : 011-2513737 / சந்தன - 071-4931696**
**துல்மினி - 071-2166492 / விந்தியா - 076-6925420**
**மேலதிக விபரங்களுக்கு : www.media.gov.lk**

**செயலாளர்,**
**சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.**